**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி – 2020**
**A031 தமிழக வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1–இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழகத்தை ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து பிரிக்கும் மலைத்தொடர் எது?
2. கொல்லிமலையை ஆண்ட சங்க மன்னன் யார்?
3. மெகஸ்தனீஸ் எழுதிய நூலைக் குறிப்பிடுக?
4. பாலை நிலத் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
5. பருத்தி நெசவில் பெயர் பெற்ற ஊர் எது?
6. சமண சமயத்தைச் சார்ந்த களப்பிர மன்னன் யார்?
7. பல்லவர் கட்டிய கோயில்களின் மூன்று பிரிவுகளை எழுதுக?
8. கொல்லம் கொண்ட பாண்டியன் யார்?
9. பாண்டிய அரசின் வருவாயைக் கண்காணிக்க அமைக்கப்பட்டத் துறையை குறிப்பிடுக.
10. தலைக்கோல் பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது?
11. முகமதுபின் துக்ளக்கின் அரச பிரதிநிதி யார்?

12. இந்து சமய மாணவர்களுக்காக ஒரு தொடக்கப்பள்ளியை மதுரையில் நிறுவி நடத்தியவர் யார்?
13. கம்பட்டம் என்பது யாது?
14. தீர்த்தகிரி ஆங்கிலேயரை எதிர்க்க எவ்விடத்தில் கோட்டை கட்டினான்?
15. தனித்தமிழ் இயக்கத்தை நிறுவியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சேர்வராயன் மலை குறித்து எழுதுக.
2. சங்ககால உணவு முறையை விவரி.
3. சிம்ம விஷ்ணு குறித்து குறிப்பு வரைக.
4. பல்லவரின் ஓவியக் கலையை விவரிக்க.
5. பிற்காலப் பாண்டிய மன்னர்களைக் குறிப்பிடுக.
6. இசுலாமியரின் வீழ்ச்சிக்கானக் காரணங்களை எழுதுக.
7. நாயக்கர் கால வரியின் வகைகளை தருக.
8. வெள்ளையர் கலகம் குறித்து விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பண்டைத் தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் அயலகத் தொடர்புகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க காலத் தொழில்கள் குறித்து கட்டுரைக்க

2. (அ) பல்லவர் வரலாற்றுச் சான்றுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பிற்காலச் சோழரின் கலை வளர்ச்சியை விளக்கி வரைக.

3. (அ) மராட்டியரின் ஆட்சி முறையை விளக்குக?

(அல்லது)

(ஆ) 19–ஆம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியை ஆராய்க.

***